பக்கங்கள் : 16

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23

ஒலி 090 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 05 சனிக்கிழமை (19.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

eDUS
Learning made lovable
சிறந்த ஒன்லைன்
கல்விக்கான நிரந்தர தீர்வு...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Beginners
www.edus.lk | 0777 123 330
(10684)

## "நாடு அனுபவித்துவரும் சாபத்தை நீக்குவோம்"

- கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்
- ஜனாதிபதி செயலகம் முற்றுகை



*(கொழும்பு)*

"நாடு 74 ஆண்டுகளாக அனுபவித்து வரும் சாபத்தை நீக்குவோம்" என்ற தொனிப்பொருளில் சோசலிச இளைஞர் அணியினர் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்., கிளிநொச்சியில் புதிதாக 20 சதொச விற்பனை நிலையங்கள்

### யாழில் வர்த்தக அமைச்சர் பந்துல

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 20 புதிய சதொச விற்பனை நிலையங்களை விரைவில் திறக்க உள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள வர்த்தகத்துறை அமைச்சர் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் 15

## அரசுக்கு எதிராக ஐ.தே.க சத்தியாகிரகப் போராட்டம்

### 25ஆம் திகதி கொழும்பில் ஏற்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சத்தியாகிரகப் போராட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும் மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியுமே குறித்த சத்தியாகிரகப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கட்சித் தலைவர் 15

## தொடர் காய்ச்சல் 9 மாத குழந்தை உயிரிழப்பு

### நெடுந்தீவில் சம்பவம்

(நெடுந்தீவு)

தொடர் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டத்தின் காரணமாக 9 மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் 15

# பயங்கரவாத சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும்

## கூட்டமைப்பின் போராட்ட களத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித்



*(கொழும்பு)*

**நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றுமுழுதாக நீக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

தமிழ் தேசிய கூட்டமைப்பினால் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் கையெழுத்துப் போராட்ட களத்துக்கு சென்ற நிலையிலேயே 15

## கடதாசி தட்டுப்பாடு பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளின் இறுதித் தவணைப் பரீட்சைகள் பிற்போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 15



அரசுக்கு எதிரான நேற்றைய போராட்டத்தில் பௌத்த பிக்கு ஒருவர் எதிர்ப்பு வெளியிட்டபோது

## கிளிநொச்சியில் பலத்த காற்றுடன் மழை

- இயல்பு வாழ்க்கை பாதிப்பு
- பல வீடுகள் சேதம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் திடீர் என பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக 14 குடும்பங்களைச் சேர்ந்த 42 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுப் 15

## கந்தரோடையில் புத்தர்சிலை

### நேரில் ஆராய்ந்த சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தரோடையில் புதிதாக புத்தர் சிலை ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யும் பிரதமர் மகிந்த குறித்த புத்தர் சிலைக்கான அடிக்கல்லை நாட்டவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 15

## சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

### காலவரையறையின்றி மூடப்பட்டது

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் மசகு எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக இவ் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்.சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் 2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த

## இ.டிஷானி

அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல சாதனைகளைப் புரிய இறைவனை வேண்டுகின்றோம்

வாழ்த்துவோர்:
நாகராசா தவமணி குடும்பத்தினர்
பெரிய புலோ, சுழிபுரம்.
(10692)

**வலம்புரி** 021 221 7603, 021 567 1532
விளம்பரத் தொடர்புகளுக்கு

குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழாக அறிவித்தல்

## கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில்

1. தம்பையா இராசலிங்கம்
தலைவர்
தமிழர் விடுதலைக் கூட்டணி
இல.74, மலர்மகள் வீதி,
அரியாலை யாழ்ப்பாணம்.
2. கணபதிப்பிள்ளை யோகராசா
செயலாளர் நாயகம்
தமிழர் விடுதலைக் கூட்டணி
ஆரையம்பதி - 2
செங்குந்தா வீதி, மட்டக்களப்பு.
3. தம்பையா திருஞானசம்பந்தர்,
ஏழாலை வடக்கு, யாழ்ப்பாணம்.
4. நடராசா மதியழகராசா
இல.14/14B மலைவேம்படி வீதி,
மானிப்பாய், சுதுமலை, யாழ்ப்பாணம்.
5. வடிவேல்கரசு சந்திரன்
இல.100A விபுலானந்தர் வீதி
நற்பிட்டிமுனை - 3,
அம்பாறை, கல்முனை.
6. வடிவேல் குபேரன்
இசை நடனக்கல்லூரி வீதி,
நொச்சிமுனை, மீள்குடியேற்றக்கிராமம்,
மட்டக்களப்பு.
7. கிருஸ்ணபிள்ளை தவகுமார்
பாலாவித்தெரு, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. யாழ்ப்பாணம்.
8. காசிப்பிள்ளை குலசேகரம்
இல.101/10 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

- வழக்காளிகள்

வழக்கு இல. நானாவிதம்/316/2022 எதிராக

**வீரசிங்கம் ஆனந்தசங்கரி**
இல.315 கண்டி வீதி,
கிளிநொச்சி.

- எதிராளி

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளிகளினால் மேலே குறிப்பிடப்பட்ட எதிராளிக்கு எதிராக "29.01.2022ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட வழக்காளிகளை உள்ளடக்கிய புதிய நிர்வாகமே தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் தற் போதைய சட்ட வலிதான மத்திய செயற்குழு என்ற பிரகடனம்" "எதிராளி தன்னை தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் செயலாளர் நாயகம் என குறிப்பிட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதையும், எதிராளியால் 20.02.2022ஆம் திகதி அனுப்பப்பட்ட "வ12" என்ற கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 19.03.2022ஆம் திகதி சனிக்கிழமை எதிராளியால் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டங்களையும் தடை செய்யும் ஓர் நிரந்தர தடைக் கட்டளை" என பிரகடனப்படுத்தும் கோரிக்கைகளை பிரதான நிவாரணமாகக் கோரி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சி தொடர்பிலான வழக்கு என்பதனால் குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ்வழக்கானது 30.03.2022ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
கிளிநொச்சி.

(C-4005)

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்
சித்திரைப் புத்தாண்டை
முன்னிட்டு
இந்தியன் செலக்ஷனின்
ஆடைத் தெரிவுகள்

- திருமண பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள்
- சல்வார்கள், சல்வார் துணிகள்
- புரொக்ஸ், வெஸ்ரேன் டொப்
- மொடர்ன் ரெஸ், சேட், ரீசேட்
- ரவுஸர்கள்

என ஏராளமான மனங்கவர் ஆடைத் தெரிவுகளோடு



இம்முறை சித்திரைப் புத்தாண்டை இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாடு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம்: 19.03.2022 முதல் 14.04.2022

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

(C-4003)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
29.08.1951

உதிர்வு
30.03.2021

அமரர்

## யோகேஸ்வரி இராஜேந்திரம்

*திதி: பங்குனி மாத அபரபக்க துதியை*

ஓராண்டு காலம் உருண்டு மறைந்தாலும்
உன் உயிர் மூச்சு மறைவதில்லை
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உன் நினைவுகள் ஒழிவதில்லை.

(C-4001)

கிழவிதோட்டம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் ஒரு வார காலத்தில்

# மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம்

## அரச மருத்துவ அதிகாரிகளின் ஒன்றியம் எச்சரிக்கை

(கொழும்பு)

**மருத்துவமனைகளின் மருத்துவர்கள் உட்பட சுகாதார ஊழியர்களுக்கு தேவையான எரிபொருள், சமையல் எரிவாயு, அத்தியவசிய மருந்து என்பன விநியோகிக்கப்படாது போனால், இன்னும் ஒரு வாரத்தில் அரச மருத்துவமனைகளை மூடும் நிலைமை ஏற்படும் என அரச மருத்துவ அதிகாரிகளின் ஒன்றியத்தின் தலைவர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.**

மருத்துவமனைகளில் காணப்படும் இந்த நடைமுறை சிக்கல்களுக்கு அரசாங்கம் தீர்வுகளை வழங்காது அமைதியாக இருந்து வருகிறது.

இன்னும் ஒரு வாரத்தில் இலங்கையில் உள்ள சகல அரச மருத்துவமனைகளும் மூடப்படும் நிலைமைக்கு வந்து விடும். மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் தமது கடமைகளுக்காக வாகனங்களில் வருவதற்கு எரிபொருள் தட்டுப்பாடு பிரச்சினையாக மாறியுள்ளது.

மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்காக உணவை சமைப்பதிலும் எதிர்வரும் நாட்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். நோயாளிகளுக்கு கொடுக்க மருந்துகள் இல்லை.

இந்த பிரச்சினை அரச அதிகாரிகளுக்கு தெரிவதில்லை. பிரச்சினை உச்சமடையும் வரை காத்திருக்கின்றனர். பிரச்சினை உக்கிரமடைந்தால், முழு மருத்துவமனை கட்டமைப்பையும் மூட நேரிடும்.

அரச மருத்துவ சேவைகளை அத்தியாவசிய சேவை என அறிவித்தால் மாத்திரம் போதாது. எரிபொருள் இல்லாவிட்டால், மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் எப்படி வேலைகளுக்கு வருவார்கள்?. ஏற்கனவே களுபோவில மருத்துவமனையின் உணவகம் மூடப்பட்டுள்ளது.

ஏனைய மருத்துவமனைகளின் நிலைமையும் அதுதான் என ருக்ஷான் பெல்லன மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## சாவகச்சேரி 'சதோச' விற்பனை நிலையத்துக்கு வர்த்தக அமைச்சர் திடீர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்துக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் விற்பனை மற்றும் கையிருப்புகள் தொடர்பாக ஆராய்வதற்காக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன சாவகச்சேரி சதோச விற்பனை நிலையத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர், குடாநாட்டின் வர்த்தக நிலவரங்களை ஆராயும் சந்திப்புகளில் நேற்று ஈடுபட்டார்.

அவருடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், வர்த்தக அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (4-5-33-30)

## பண்டிகைக் காலத்தில் சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாக கடைப்பிடியுங்கள்

### ஹேமந்த ஹேரத் கோரிக்கை



(கொழும்பு)

கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்துவதில் பெற்ற வெற்றியைத் தொடர்வதற்கு, பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை பேணி செயற்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் ஹேமந்த ஹேரத் இந்த கோரிக்கையினை முன் வைத்துள்ளார்.

பொருள் கொள்வனவு, ஆர்ப்பாட்டங்கள் அல்லது பொதுக் கூட்டங்களின் போது சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பண்டிகைக் காலத்தில் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த மக்கள் இப்போதே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலத்தில் கொரோனா மரணம் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இன,மத உணர்வை தூண்டிவிட்டு ஆட்சி செய்ததாலே இலங்கைக்கு இந்த நிலை

### பொருளாதார நிபுணர் எச்சரிக்கை




(கொழும்பு)

இன-மத உணர்வை தூண்டி ஆட்சி செய்ததன் விளைவே இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என பொருளாதார நிபுணர் ஆனந்த் ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவொன்றில் அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கை தற்போது கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. கடும் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், நாளுக்கு நாள் பொருட்களின் விலை அசாதாரணமாக உயர்ந்து வருகின்றது.

எரிபொருளுக்கு தட்டுப்பாடு, மின் துண்டிப்பு, எரிவாயு தட்டுப்பாடு, உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன. மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, பொருளாதார நிபுணரும், எழுத்தாளருமான ஆனந்த் ஸ்ரீனிவாசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரின் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "வெகுஜனத்தின் வாழ்வாதர - பொருளாதார மேம்பாடுகளை விட்டு, இன-மத உணர்வு தூண்டுதலை மட்டுமே பிரதானமென ஒரு அரசு இயங்கினால் இந்நிலையை தவிர்க்கவே முடியாது என்பதற்கு, இலங்கையின் தற்போதைய சூழல் ஓர் எச்சரிக்கை." என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவினருக்கான தடகளப் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் சிரேஷ்ட பிரிவுப் பெண்களிற்கான 800 மீற்றர் ஓட்டத்தில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி. வித்தியகலா தங்கப் பதக்கத்தையும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வி.ஜி.கிருஷாந்தி வெள்ளிப் பதக்கத்தையும், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியைச் சேர்ந்த ரி.பூமிகா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (படம்:- கனகராஜா)

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை பும்ரா முன்னேற்றம்



டெஸ்ட் போட்டியில் சிறந்த பட்ஸ்மேன், பந்து வீச்சாளர், ஓல்ரவுண்டர்களின் தரவரிசை பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. பட்ஸ்மேன்களுக்கான தரவரிசை பட்டியலில் அவுஸ்திரேலிய வீரர் மார்னஸ் லபுசேன் முதல் இடம் பிடித்துள்ளார். இந்திய வீரர்களில் கப்டன் ரோகித் சர்மா 6 ஆவது இடத்துக்கு முன்னேறியுள் ளார். விராட் கோலி 9 ஆவது இட த்திலும், விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் 10 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சாளர்களுக்கான பட்டியலில் அவுஸ்திரேலிய வீரர் பேட் கம்மின்ஸ் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளார். இந்திய வீரர் அஸ்வின் 2 ஆவது இடத்தில் நீடிக்கிறார். 3 ஆவது இடத்தில் தென்னாபிரிக்கா வின் ரபாடா உள்ளார். இந்திய அணியின் ஜஸ்பிரீத் பும்ரா 4 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஓல் ரவுண்டர்களுக்கான தரவரிசை பட்டியலில் வெஸ்ட் இண்டீஸ் அணி வீரர் ஜேசன் ஹோல்டர் முதல் இடமும், இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 2 ஆவது இடத்திலும் அஸ்வின் 3 ஆவது இடத்திலும் உள்ளனர். (4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி இராசலிங்கம் டிஷானி**

யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் 2021 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் **148 புள்ளிகளைப்** பெற்று சித்தியெய்தி பாடசாலைக்கும் எமக்கும் பெருமை சேர்த்த செல்வி **இராசலிங்கம் டிஷானியை** பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations **ஆசைத்தாத்தா குடும்பத்தினர்** (மீசாலை)

(C-4006)

## பணியாளர் தேவை

நெல்லியடியிலுள்ள தனியாள் நிறுவனம் ஒன்றிற்கு பெண் பணியாளர் தேவை.
தகுதி பரிசீலிக்கப்படும். பயிற்சிக் காலத்திற்கு ரூபா 12,000/= நிரந்தரத்திற்கு ரூபா 20,000/= + மேலதிக கொடுப்பனவுகள்.
இயக்குநர் (C-4008)

**076 484 7171**

## பணியாளர் தேவை

நெல்லியடியிலுள்ள கிறீம் கவுஸ் ஒன்றிற்கு ஆண் வேலையாள் தேவை.
தங்குமிட வசதி செய்து தரப்படும்.
சம்பளம் நேரில் தீர்மானிக்கலாம்.
உரிமையாளர் (C-4007)

**077 377 3197**


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2538

### யதுஷா




### றொபின்சன்




### சித்ரா




### கரிபவன்




### தஸ்வினி




### விதுசன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன்-ரஷ்யா பேச்சுவார்த்தை பின்னடைவு

# மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரிப்பு

(கீவ்)

**உக்ரைன் - ரஷ்யா நாடுகளிடையே முன்னெடுக்கப்பட்டு வந்த பேச்சுவார்த்தையில் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படாததையடுத்து சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.**

உக்ரைனில் போர்நிறுத்தம் ஏற்படும் என்ற நம்பிக்கை பொய்த்து போனதால் நேற்று முன்தினம் உலக எண்ணெய் விலை சுமார் 10 சதவீதம் உயர்ந்தது.

அதன்படி, ப்ரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 8.55 டொலர் அதிகரித்து, 107 டொலராகவும் அத்துடன், ஒரு பீப்பாய் அமெரிக்க WTI மசகு எண்ணெயின் விலை 8 டொலர் அதிகரித்து 104 டொலராக ஆக உயர்ந்துள்ளது.

உக்ரைன் - ரஷ்யா நாடுகளிடையே நேரடிப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த நாட்களில் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடைந்ததை அடுத்து 100 டொலருக்கு கீழாக குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜனாதிபதிக்கு சுபீட்சமான நோக்கம் என எதுவுமில்லை-சாணக்கியன் எம்.பி

(காலி)

மக்களின் கோரிக்கையினை ஏற்று அரசியலுக்கு வந்ததாக கூறும் ஜனாதிபதி, மக்களின் கோரிக்கையினை ஏற்று பதவியினை இராஜினாமா செய்ய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பாக காலியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மக்களுடைய கோரிக்கைக்கு இணங்கவே அரசியலுக்கு வந்தார் என்று சொன்னால், இன்று மக்களுடைய கோரிக்கைக்கு இணங்கி அவர் பதவி துறந்து வீட்டுக்கு செல்ல வேண்டும்.

இன்று அனைத்து பிரதேசங்களிலும் "GO HOME GOTA" என்று சொல்லும் நிலையில், மக்களுக்காக அரசியலுக்கு வந்தவர் என்றால் இப்போது வீட்டிற்கு செல்ல வேண்டும்.

அவரால் இந்த நாட்டினை சிறந்த முறையிலே நடத்த முடியாது. இந்த நாட்டில் ஜனாதிபதியின் சுபீட்சமான நோக்கம் என எதுவும் கிடையாது." என அவர் தெரிவித்துள்ளார். (நி)


## நன்றி நவில்கின்றோம்

கடந்த (18.02.2022) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

### அமரர். திருமதி. புஸ்ப்பமலர் தர்மலிங்கம்



அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது எமக்கு நேரிலும் தொலைபேசி மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் அனுப்பி வைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை தயாரித்து அனுப்பியவர்களுக்கும் மற்றும் எம்முடன் தோளோடு தோள் நின்று சகலவிதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய தொண்டர்கள், அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்

குறிப்பு : 20.03.2022 நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன உணவு நிகழ்வில் கலந்து சிறப்பித்து அன்னாரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

பெண்கள் குடியேற்றத்திட்டம்,
புளியங்குளம்,
ஒட்டுசுட்டான். (3999)

குடும்பத்தினர்.


# இராசிபலன்

19.03.2022
பங்குனி 05, சனிக்கிழமை
பிரதமை பிற்பகல் 1.02 மணிவரை

அத்தம் பின்னிரவு 1.04 மணிவரை
சுபநேரம் - 3.18-4.48 மணிவரை
இராகுகாலம் -9.18-10.48 மணிவரை

சந்திராஷ்டமம்- சதயம், பூரட்டாதி

வளவன்




கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்பத்தினரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப காரிய செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




உங்களின் திறமைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.




குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் . நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்களின் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்




விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.




குடும்ப ஒற்றுமை கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை மறக்க விரும்பினால் அதுவே தான் நினைவில் நிற்கும்.

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை கைதடியில்

(பனிக்கன்குளம்)

மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களங்களமானது மத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் இணைந்து பொது மக்களுக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களங்களுக்கூடாக மேற்கொள்ளப்படும் சேவைகளில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் முகமாக வட மாகாணத்தில் இரு நாள் நடமாடும் சேவை ஒன்றை நிகழ்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையானது எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வடக்கு மாகாணசபை வளாகம், ஏ9 வீதி, கைதடி, யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது.

இதன் போது பொது மக்களுக்கு பின்வரும் சேவைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2014/2015 ஆம் ஆண்டின் பட்ஜெட்டில் ஆலோசிக்கப்பட்டதன் படியாக அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளுக்கான நிபந்தனைகளை நீக்குதல், மத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு இதுவரை உடமை மாற்றல் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு நிலுவையாக உள்ள விடயங்கள், புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல், அனைத்து வாகனங்களுக்குமான அடையாள மற்றும் எடை சான்றிதழ் வழங்குதல், உடமை மாற்ற விண்ணப்ப படிவம் ஏற்றுக் கொள்ளல், ஓட்டுநர் பரீட்சார்த்த தேர்வு, தனிப்பட்ட மோட்டார் கோச் இனை Omini Bus ஆக மாற்றம் செய்தல், வாசித்தல், எழுதுதலில் விசேட தேவை உடையோரிற்கான சாரதி அனுமதிப்பரீட்சை.

மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக மத்திய மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படவேண்டிய தேவை உள்ளமையால் குறித்த சேவைகளை பெறவிரும்புவர்கள் அருகிலுள்ள பிரதேச செயலகங்கள் அல்லது வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் கைதடியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 2022 ஏப்ரல் 22 ஆம் திகதிக்கு முன்னராக பதிவுகளை மேற்கொண்டு குறித்த தங்களது சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். (5-4-281)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் உள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் ஆசிரிய மாணவர்களுக்கான சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. கலாசாலை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. செல்வசேனக் குருக்களை தீட்சா குருவாகக் கொண்டு நடைபெற்றது. (படம்:- சிவசாந்தன்)




மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் கா.கந்தசாமியின் மணிவிழாவும் வீரசிங்கன் மலர் வெளியீட்டு விழாவும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (படம் :- மகாலிங்கம்)

# வடக்கிலிருந்து ஏற்றுமதிகளை மேற்கொள்ள தயாராகவுள்ளோம்

## வர்த்தகத்துறை அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இருந்து பனங்கள்ளு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக வர்த்தகத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் வர்த்தக துறை அமைச்சானது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இருந்து ஏற்றுமதியினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

ஏற்றுமதியை செயற்படுத்துவதற்கான கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொண்டு அதனை செயற்படுத்த தயாராக உள்ளோம்

அதன் ஒரு அங்கமாக பனங்கள்ளு உற்பத்தி கிராமம், பனங்கட்டி உற்பத்தி கிராமம், கடலட்டை உற்பத்தி கிராமம் போன்றவற்றை உருவாக்குவது தொடர்பான கோரிக்கைகள் ஏதாவது எமது அமைச்சுக்கு கிடைக்கப்பட்டால் நாங்கள் அதற்கு ஆதரவளிக்கத் தயார். தற்போது நமது நாட்டிற்கு ஏற்றுமதி கட்டாயம் தேவையானது.

குறிப்பாக நுவரெலியாவில் கோப்பி ,தேயிலை போன்றவை ஏற்றுமதி செய்யப படுகின்றன. வடக்கில் இருந்து ஏற்றுமதி குறைவாகக் காணப்படுகின்றது. எனவே வடக்கில் இருந்து பனங்கள்ளை தயார் செய்து ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார். (4-5-33)

# வேலைத்திட்டங்களை முன்னெடுக்க பின்னடிக்கும் ஒப்பந்தகாரர்கள்

(சாவகச்சேரி)

நாட்டு நிலைமை காரணமாக சில உள்ளூராட்சி மன்றங்களில் ஒப்பந்தம் செய்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க ஒப்பந்தகாரர்கள் பின்னடிப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக சீமெந்து, இரும்புப் பொருட்கள் உள்ளிட்ட மூலப் பொருட்களின் விலையேற்றம் காரணமாகவே ஒப்பந்தம் மேற்கொண்ட ஒப்பந்தகாரர்கள் பணிகளை முன்னெடுக்காமல் பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட வேலைத்திட்டங்களே இவ்வாறு இழுபறி நிலையில் காணப்படுவதாக உள்ளூராட்சி சபையினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (5-4-30)

# தமிழ் மக்களுக்கான நீதி சர்வதேசத்தின் கையில் உள்ளது

## சுரேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நீதிப் பொறிமுறை முன் இலங்கை அரசை பாரப்படுத்த செயற்படுவதன் மூலம் தான் தமிழ் மக்களுக்கான ஒரு பரிகார நீதியையும், மீள நிகழாமையையும், உறுதிப்படுத்த முடியும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வு தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமைப் பேரவையின் அண்மையில் நடந்த அமர்வில் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆற்றிய உரை ஒரு கேளிக்கை விருந்தாகவே அமைந்துள்ளது. அரசியல் யாப்பில், மனித உரிமை பாதுகாப்பதற்கான விடயங்கள் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும், சுயாதீன நீதி பொறிமுறையினால், அவை நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

அரசியல் யாப்பிலே உள்வாங்கப்பட்ட விடயங்கள் எவற்றை அவர்கள் நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள் என்பதை அவர் கூற தவறிவிட்டார். யுத்தக் குற்றங்களுக்கான தண்டனையின்மை நீடிக்கிறது. விசாரணைகள் நடத்தப்படவில்லை. குறிப்பாக, அரசியல் யாப்பிலே அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான பொது மன்னிப்பு பொறிமுறை ஒன்று ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு கீழ் வருகிறது.

அதில் பல்லாண்டு காலமாக இருக்கக்கூடிய எங்களுடைய அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு பலமுறை கோரிக்கைகள் வைத்தும் அவர்களை விடுதலை செய்யாமல் யுத்த குற்றங்களால் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்திருக்கிறார்கள்.

இதுதான் மனித உரிமையை பேணுவதற்கு அரசியல் யாப்பிலே உள்ள ஏற்பாடா? அல்லது அதன் அடிப்படையில் தான் மனித உரிமை கோட்பாடுகளை அரசாங்கம் மதித்து நடப்பதற்கான எடுத்துக்காட்டா? என்ற கேள்வி சர்வதேச சமூகம் முன் எழுகின்றது.

உள்ளக பொறிமுறையின் ஊடாக அரசாங்கம் முன்னெடுத்த நல்லிணக்க நடவடிக்கைகள் என்ன? பொறுப்புக் கூறல் நடவடிக்கை என்ன? என்பதை அவர் தெளிவாக குறிப்பிடத் தவறியுள்ளார். எந்த விதமான நல்லிணக்க நடவடிக்கைகளோ, பொறுப்பு கூறலுக்கான எந்தவித ஆரம்பகட்ட முயற்சியோ, அரசாங்கத்தால் கொள்ளப்படவில்லை. மாறாக நினைவேந்தல் நிகழ்வுகளையும் நீதிகோரி அமைதியாக நடத்தப்பட்ட ஜனநாயக போராட்டங்களையும் கொடூரமான முறையில் அரசால் தடுக்கப்படுவது நல்லிணக்க நடவடிக்கையா?

மேலும் சர்வதேச சமூகம் வலியுறுத்திய பல விடயங்களை அரசாங்கம் முன்னெடுக்காமல், தவிர்த்து வருகிறது.

ஆகவே இதன் அடிப்படையில் சர்வதேச சமூகம் காத்திரமான, உறுதியான முறையிலே சர்வதேச நீதிப் பொறிமுறை முன் இலங்கை அரசை பாரப்படுத்த செயற்படுவதன் மூலம் தான் தமிழ் மக்களுக்கான ஒரு பரிகார நீதியையும், மீள நிகழாமையையும், உறுதிப்படுத்த முடியும் என மேலும் தெரிவித்தார். (4-5-299)

# கும்பாபிஷேகதின சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மடத்தடி அருள் மிகு ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகதின சங்காபிஷேகம் நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 க்கு ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து விஷேட பூசைகள் மற்றும் வசந்த மண்டபப்பூசை இடம்பெற்று வீதியுலா வருதலும் இடம் பெறும். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
# சபை நிதி வேலைத் திட்டம் 2022 - கட்டம் I

01. தலைவர்,பெறுகைக்குழு,வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/ 2020(I)ஆம் இலக்க 11.01.2021 ஆந் திகதிய.04/2016(II)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/ 2016(III) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. இல 1-19 வரையான கேள்விகளுக்கு கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு.வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்.அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமானதரத்தில் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள்.கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 021 224 0017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 19.03.2022 தொடக்கம் 01.04.2022ஆம் திகதிவரை வேலை நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 14.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 19.03.2022 ஆம் திகதியிலிருந்து 01.04.2022 ஆம் திகதிவரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாகரூபா.3000/- (வரிநீங்கலாக) இனை செலுத்திபெற்றுக்கொள்ளலாம். இத்தொகைபணமாகச் செலுத்தப்படவேண்டும்.
07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 04.04.2022 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர் .பிரதேசசபை பெறுகைக்குழு.வலிகாமம் தெற்கு பிரதேசசபை.சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லதுஅவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கிடைக்கப்பெற்றகேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்குஅதிகாரமுண்டு.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.


| இல. | வேலை விபரம் ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 1 | காளி கோவில் 1ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/01 | 0.702 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 8,000.00 | 20.06.2022 |
| 2 | சிறிசுப்பிரமணிய சனசமூக நிலைய முன் வீதி, கந்தரோடை NP/14/41/15/02(05)/CF/2022/02 | 0.715 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 8,000.00 | 20.06.2022 |
| 3 | பிரதேச செயலக குறுக்கு வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/03 | 0.687 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 7,000.00 | 20.06.2022 |
| 4 | கே.கே.எஸ். வீதி 3ம் ஒழுங்கை (சம்பத் முன் வீதி) மற்றும் முத்து கிருஸ்ணர் 3ம் குறுக்குவீதி NP/14/41/15/02(05)/CF/2022/04 | 0.807 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 9,000.00 | 20.06.2022 |
| 5 | காளி கோவில் வீதி,சிற்பி ஒழுங்கை மற்றும் நாகம்மாள் 3ம் வீதி NP/14/41/15/02(05)/CF/2022/05 | 0.805 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 9,000.00 | 20.06.2022 |
| 6 | சூளானை வைரவர் வீதி NP/14/41/15/02(05)/CF/2022/06 | 0.573 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 6,000.00 | 20.06.2022 |
| 7 | அந்திரான் உப ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2022/07 | 1.032 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 11,000.00 | 20.06.2022 |
| 8 | ஐந்து வேம்படிவீதி,தாவடி மிகுதி வேலை, பத்தானை 6ம் உப வீதி மற்றும் மோகன் வீதி உப வீதி NP/14/41/15/02(05)/CF/2022/08 | 2.172 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 06.06.2022 | 22,000.00 | 04.07.2022 |
| 9 | மட்டக்கச்சி 3ம்,4ம் குறுக்கு வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/09 | 0.806 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 9,000.00 | 20.06.2022 |
| 10 | மல்வம் 3ம் குறுக்கு 2,3,4,5,6,7 உபவீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/10 | 1.399 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 14,000.00 | 20.06.2022 |
| 11 | ஞானவைரவர் வீதியின் கிளை வீதிகள் மற்றும் புகையிரதநிலைய வீதியின் கிளை வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/11 | 1.644 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 17,000.00 | 20.06.2022 |
| 12 | செட்டிவளவுகிளை வீதி மற்றும் இணுவில் மத்தியகல்லூரி மைதான அருகாமைவீதி NP/14/41/15/02(05)/CF/2022/12 | 0.990 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 10,000.00 | 20.06.2022 |
| 13 | தாவடி இ.த.கபாடசாலைமைதானமுன் வீதி மற்றும் நெல்லுருவி பிள்ளையார் கிளைவீதி NP/14/41/15/02(05)/CF/2022/13 | 1.476 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 15,000.00 | 20.06.2022 |
| 14 | பலாலி வீதியின் குறுக்கு வீதி மற்றும் சுன்னாகம் புத்தூர் வீதியில் வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/14 | 0.963 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 10,000.00 | 20.06.2022 |
| 15 | கருணாகரப்பிள்ளையார் வீதி மற்றும் கன்னிமார் கோவில் பின் வீதி NP/14/41/15/02(05)/CF/2022/15 | 2.796 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 06.06.2022 | 28,000.00 | 04.07.2022 |
| 16 | உசத்தியோடைமயானத்தினை ஊடறுத்துச் செல்லும் வீதி NP/14/41/15/02(05)/CF/2022/16 | 2.433 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 06.06.2022 | 25,000.00 | 04.07.2022 |
| 17 | முத்துமாரி அம்மன் 2ம், 3ம் 5ம் 6ம் குறுக்கு வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2022/17 | 1.275 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 23.05.2022 | 13,000.00 | 20.06.2022 |
| 18 | சிவன் கோவில் வீதி (பின் வீதி) மற்றும் கோட்டைக்காடு சாலம்பன் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/18 | 2.577 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 06.06.2022 | 26,000.00 | 04.07.2022 |
| 19 | வீதி மின்விளக்குகள் கொள்வனவு NP/14/41(15)/03/05/Street light/2022/01 | 2.311 | 60 நாட்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 49 நாட்கள் | 23.05.2022 | 13,000.00 | 20.06.2022 |

10. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபைதலைமைஅலுவலகத்தில் 25.03.2022 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

(சி-4000) க.தர்ஷன், தவிசாளர், பெறுகைக்குழு,வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம். (19.03.2022)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு



(கொழும்பு)

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 6 ஆயிரத்து 261 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாதத்தில் மாத்திரம் 4 ஆயிரத்து 522 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கடந்த மாதத்தில் மாத்திரம் ஆயிரத்து 511 நோயாளிகளும், இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 228 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

இடைக்கிடை மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

## கட்டணம் செலுத்தாவிடின் நீர் விநியோகம் துண்டிப்பு

(கொழும்பு)

ஆறு மாதம் அல்லது ஒரு வருட காலத்திற்கு தொடர்ச்சியாக நீர்க்கட்டணத்தை செலுத்தாத நுகர்வோருக்கு, நீர் விநியோகத்தை துண்டிப்பதற்கான நடவடிக்கையை, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆரம்பித்துள்ளது.

கொவிட்-19 பரவல் காரணமாக, கட்டணத்தை செலுத்தாதவர்களுக்கு, நீர்விநியோகத்தை துண்டிக்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில், அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கட்டணம் 7.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதென நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்துள்ளார். (நி)

## மண்ணெண்ணெய்க்காக காத்திருந்த பெண் மயக்கம்



(கொழும்பு)

இலங்கையில் மண்ணெண்ணெய்க்காக 2 கிலோமீற்றர் நீளமான வரிசையில் காத்திருந்த பெண்ணொருவர் மயக்கமடைந்துள்ளார்.

அந்தப் புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றது. (நி)

பாரதம்

# உக்ரைன் பாடசாலை மீது குண்டு வீசியதில் 21 பொதுமக்கள் உயிரிழப்பு

(கீவ்)

உக்ரைனில் கார்கிவ் நகருக்கு அருகே மெரேபாவில் உள்ள ஒரு பாடசாலை, சமுதாய கூடம் ரஷ்ய இராணுவத்தின் பீரங்கி தாக்குதலில் தரைமட்டமானது.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதல் நேற்று 23 ஆவது நாளை எட்டி இருக்கிறது.

தலைநகர் கீவ், கார்கிவ், மரியுபோல் உள்ளிட்ட அனைத்து முக்கிய நகரங்களிலும் ரஷ்யப் படைகள் தொடர்ந்து ஏவுகணை மற்றும் குண்டுகளை வீசி தாக்கி வருகின்றன. குறிப்பாக கீவ், கார்கிவ் நகரங்களில் தாக்குதல் தீவிரமாக இருந்து வருகிறது.



கிழக்கு உக்ரைனில் கார்கிவ் நகருக்கு அருகே மெரேபாவில் உள்ள ஒரு பாடசாலை, சமுதாயகூடம் மீது ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தியது. அந்த கட்டடங்கள் மீது பீரங்கித் தாக்குதல் தொடுக்கப்பட்டதில் தரைமட்டமானது.

பாடசாலை, சமுதாயகூடத்தில் ஏராளமான பொது மக்கள் தங்கி இருந்தனர். தாக்குதல் காரணமாக அவர்களது கதி என்ன ஆனது என்பது குறித்து தகவல் இதுவரை வெளியாகவில்லை.

இந்த நிலையில் மெரேபாவில் பாடசாலை, சமுதாய கூடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 21 பொதுமக்கள் பலியாகி உள்ளனர் என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

25 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அதில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. மேலும் அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் பலத்த சேதம் அடைந்துள்ளன.

கார்கிவ் நகரில் உள்ள ஐரோப்பியாவின் மிகப்பெரிய மார்க்கெட்டான பாரபஷோவோ சந்தையில் குண்டுகள் வீசப்பட்டன. அதில் அந்த மார்க்கெட் தீப்பிடித்து எரிந்து முற்றிலும் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

# உக்ரைன் மீதான படையெடுப்பை எதிர்ப்பவர்கள் துரோகிகள்

## புடின் எச்சரிக்கை

(மொஸ்கோ)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை எதிர்ப்பவர்கள் துரோகிகள். அத்தகைய துரோகிகள் களையெடுக்கப்படுவார்கள் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடுமையாக எச்சரித்துள்ளார்.

தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் பேசிய அவர், உக்ரைன் மீதான போருக்கு பலர் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். இது தேசத் துரோகமாகும். துரோகிகள் யார்? தேசப்பற்று உள்ளவர்கள் யார்? என ரஷ்யர்களால் எளிதில் தெரிந்துகொள்ள முடியும். துரோகிகளை ரஷ்யர்கள் வெளியேற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

போரை எதிர்ப்பவர்கள் மேற்கத்தேய நாடுகளின் கைப்பாவையாக போர் எதிர்ப்பாளர்கள் செயற்படுகிறார்கள்.

ரஷ்யாவின் அழிவைத் தவிர அந்த நாடுகளுக்கு வேறெந்த நோக்கமும் இல்லை எனவும் புடின் தெரிவித்தார்.

புடினின் இந்த எச்சரிக்கை போருக்கு எதிராக ரஷ்யாவில் போராடுபவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்பதை உணர்த்துவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (நி)

# முன்னேற முடியாமல் தள்ளாடும் ரஷ்யா

## பிரித்தானியா தெரிவிப்பு

(லண்டன்)

உக்ரைனிய படையினரின் இடைவிடாத எதிர்த் தாக்குதல் காரணமாக, ரஷ்யப் படைகளின் தாக்கும் திறன் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக உக்ரைனில் தங்கள் தாக்குதலை தொடர்வதில் ரஷ்யப் படைகள் போராடி வருவதாக, பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சகத்தின் சமீபத்திய உளவுத்துறை மதிப்பீடு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'இராணுவ தளபாட பிரச்சினைகள் தொடர்வதால், உக்ரைன் மீதான படையெடுப்பில் ரஷ்யப் படைகள் முன்னேற முடியாமல் தள்ளாடி வருகிறது.

ரஷ்யப் படையினரின் கட்டுப்படுத்தப்பட்ட இயக்கம் மற்றும் வான்படை பற்றாக்குறை காரணமாக, அப்படையினருக்கு கிடைத்தியாவசிய பொருட்களான உணவு மற்றும் எரிபொருள் உள்ளிட்டவற்றை விநியோகிக்க இயலவில்லை.

இடைவிடாத உக்ரைன் எதிர்த்தாக்குதல் காரணமாக, தங்களின் விநியோகச் சங்கிலியை காப்பதற்காக அதிகளவிலான ரஷ்யப்படைகளை திசை திருப்ப வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளனர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 7,000 ரஷ்ய படையினர் உயிரிழந்ததாக அமெரிக்கா மதிப்பிட்டுள்ளது. ஆனால், 500 இற்கும் குறைவான ரஷ்யப் படையினரே உயிரிழந்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது. (நி)

# உக்ர...

# புடின்...

❖ உக்ரைன் ந...

❖ நேட்டோவி...

❖ ரஷ்யாவிற்கு... ஆயுதக் கு...

❖ நவ-நாசிச...

(மொஸ்கோ... உக்ரைன் ே... தரப்பில், நி... தெரிவித்துள்ள...

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல், ஜனாதிபதி விளாடிமிர் புடின் துருக்கிய ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகனை தொலைபேசியில் அழைத்து, உக்ரைனுடன் சமாதான உடன்படிக்கைக்கு ரஷ்யாவின் துல்லியமான கோரிக்கைகள் என்ன என்பதை அவரிடம் தெரிவித்தார்.

# 180 ஊடகங்களை இழுத்து மூ...

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை பிடித்ததிலிருந்து இதுவரை 180 ஊடகங்களை இழுத்து மூடியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆப்கானிஸ்தானிலிருந்து கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமெரிக்க படைகள் வெளியேறிய நிலையில் தலிபான்கள் ஆட்சியை பிடித்தனர். அது முதலாக ஆப்கானிஸ்தானில் பல்வேறு கட்டுப்பாடுகளையும், தடைகளையும் தலிபான்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

ஆட்சிக்கு வந்த 7 மாத காலகட்டத்திற்குள் ஆப்கானிஸ்தானில்

# 3 திபெத்திய புத்த சி... அழித்த சீ...

(பீஜிங்)

திபெத்தியர்களின் மத மரபுகளை முத்திரை குத்துவதற்காக ஆறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட திபெத்திய புத்த சிலைகளை சீன அரசாங்கம் இடித்துள்ளது.


சீனர்கள் புத்த சிலைகளை அழிப்பதன் நோக்கம், திபெத்தியர்களின் நம்பிக்கையையும் திபெத்திய மரபுகளைப் பாது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...ரன் மீதான போரை நிறுத்த ... முன்வைத்த நிபந்தனைகள்

- ...நடுநிலையாக இருக்க வேண்டும்
- ...இல் சேர விண்ணப்பிக்கக் கூடாது
- ...கு அச்சுறுத்தல் இல்லை என்பதை உறுதிப்படுத்த ...குறைப்பு செய்ய வேண்டும்
- ...சத்தை கண்டித்து கட்டுப்படுத்த வேண்டும்



**...கா) ...போரை நிறுத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் ...நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக துருக்கி ...ளது.**

தொலைபேசி அழைப்பு முடிந்த அரை மணி நேரத்திற்கு பிறகு, எர்டோகனின் முன்னணி ஆலோசகரும் செய்தித் தொடர்பாளருமான இப்ராஹிம் கலின் ரஷ்யாவின் கோரிக்கைகள் குறித்து விபரித்துள்ளார்.

அவற்றில் முக்கியமானது, உக்ரைன் நடுநிலையாக இருக்க வேண்டும் மற்றும் நேட்டோவில் சேர விண்ணப்பிக்கக் கூடாது. ஆனால், இதை உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளார்.

அடுத்தது, உக்ரைன் ரஷ்யாவிற்கு அச்சுறுத்தலாக இல்லை என்பதை உறுதிப்படுத்த ஆயுதக் குறைப்பு செயல்முறைக்கு உட்படுத்தப்பட வேண்டும். உக்ரைனில் ரஷ்ய மொழிக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும்.

உக்ரைன் அனைத்து வகையான நவ-நாசிசத்தையும் கண்டித்து, அவற்றைக் கட்டுப்படுத்துவதாக உறுதியளித்தால் போதுமானதாக இருக்கும் என முதல் வகை கோரிக்கைகள் உள்ளன.

இரண்டாவது வகை கோரிக்கைகள், இந்த விடயங்களில் உடன்பாடு ஏற்படுவதற்கு முன்பு தனக்கும் ஜனாதிபதி ஜெலென்ஸ்கிக்கும் இடையே நேருக்கு நேர் பேச்சுவார்த்தைகள் தேவை என்று புடின் கூறியுள்ளார்.

ஜெலென்ஸ்கி ஏற்கனவே ரஷ்ய ஜனாதிபதியை சந்திக்கவும், அவருடன் நேருக்கு நேர் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக இருப்பதாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கிழக்கு உக்ரைனில் உள்ள டான்பாஸின் நிலையை குறிப்பிட்டுச் சொல்லாமல், கிழக்கு உக்ரைனில் உள்ள நிலப்பரப்பை உக்ரைனிய அரசாங்கம் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று ரஷ்யா கோரும் எனவும் 2014 இல் ரஷ்யாவுடன் சட்டவிரோதமாக இணைந்த கிரிமியா, உண்மையில் இப்போது ரஷ்யாவிற்கு சொந்தமானது என்பதை உக்ரைன் முறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ரஷ்யா கோரும் எனவும் தான் அனுமானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## ...மூடிய தலிபான்கள்


...இருந்த 475 ஊடகங்களில் 180 ஊடக ங்களை தலிபான் இழுத்து மூடியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த தகவலை வெளியிட்டுள்ள ஆப்கானிஸ்தான் பத்திரிகையாளர்கள் அமைப்பு இதனால் 43 சதவீத பத்திரிகையாளர்கள் வேலை இழந்துள்ளதாக தெரிவித்துள்ளது. (நி)

## ...சிலைகளை ...ீனா

...காப்பதற்கான அவர்களின் உரிமையையும் ஒழிப்பதாகும்.

இந்த சம்பவங்கள் ஊடாக புதிய ஒடுக்குமுறை மற்றும் கலாசார இனப்படு கொலையின் நேரடியான நிகழ்வைக் குறிக்கிறது. (நி)

## போலந்து எல்லையிலுள்ள
### விமான நிலையத்தை தாக்கியது ரஷ்யா




(கீவ்)

போலந்து எல்லையில் இருந்து 70 கி.மீ. தூரத்தில் உள்ள விமான நிலையத்தை குறிவைத்து ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

உக்ரைன் நாட்டில் எல்லா நகரங்களிலும் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைன் மேற்கு பகுதியில் போலந்து நாட்டின் எல்லையில் இருந்து சுமார் 70 கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது 'விவ்' விமான நிலையம். இந்த விமான நிலையம் அருகிலேயே விமானங்கள் பழுது பார்க்கும் ஆலை அமைந்துள்ளது.

இதன் மீது ரஷ்யா நேற்று குண்டுகளை வீசியும், ஏவுகணைகளை வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளது. தாக்குதலால் அந்த இடம் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. (நி)

## வடக்கு சிலியை தாக்கிய ராட்சத மணற் புயல்



(சிலி)

வடக்கு சிலியில் உள்ள டியகோ டி அல்மாக்ரோ நகரத்தை ராட்சத மணல்புயல் தாக்கிய காட்சிகள் வெளியாகியுள்ளன.

மணல் புயல் வீசியதன் விளைவாக சுமார் 9 ஆயிரம் வீடுகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அட்டகாமா பாலைவனத்தை ஒட்டி அமைந்துள்ள இந்த நகரத்தை நோக்கி ராட்சத புழுதி நகர்ந்து வரும் காட்சிகள் வீடியோவில் பதிவாகி உள்ளன.

எனினும் ஏற்கனவே இடி மின்னலுடன் கூடிய கன மழை மற்றும் ஆலங்கட்டி மழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும், மணல் புயல் வீசக்கூடும் எனவும், வானிலை மையம் எச்சரிக்கை விடுத்திருந்ததால் நகரத்தில் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழி உணவு களஞ்சியசாலையை

# விரைவில் புனரமைக்கவும்

## அதிகாரிகளுக்கு பந்துல உத்தரவு

(அராலி)

**நாவற்குழி உணவு களஞ்சியசாலையை, உடனடியாக புனரமைத்து குடாநாட்டுக்கான அத்தியாவசிய பொருட்களை சேமித்து விநியோகம் செய்யும் களஞ்சியமாக மாற்றுமாறு, களஞ்சியசாலை ஆணையாளருக்கு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.**

நேற்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன யாழிற்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.இதன்போதே அவர் மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித்தார்.

மேலும், நெருக்கடி நிலைகளுக்கு பின்னதாக, இக்களஞ்சியத்தை, "ஒரே கூரையின் கீழ் அனைத்து அரச அங்காடிகளும்" என்ற அடிப்படையில் நாடுமுழுவதும் அமையவுள்ள "ரஜவாச" பல்பொருள் விற்பனை நிலையமாக மாற்றுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். (4-5-104)





சண்டிலிப்பாய் விக்னேஸ்வரா வித்தியாசாலை நிறுவுநர்களில் ஒருவரான அமரர். கந்தர் பொன்னரின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட முப்பரிமாண பாடசாலைப் பெயர்ப்பலகை சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளரால் திறந்து வைக்கப்பட்டது. (படம்-மகாலிங்கம்)

## நூல் அறிமுக விழா

(குப்பிழான்)

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் கருவி நிறுவனமும் இணைந்து நடத்தும் பிரபல ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகத்தின் "மாற்றத்தை நாடும் மாற்றுத் திறனாளிகள்" நூல் அறிமுக விழா நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஸ்ரீகஜன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெறும். (5-4-18)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தலைவாசல் இராஜகோபுர கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கலசம் வைக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (படங்கள்-ரவிசாந்)

# பொதுச்சேவை ஆணைக்குழு ஊடாக மின் இணைப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வு

(குருமன்காடு)

வவுனியாவில் மின் இணைப்பு தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்ற 100 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவின் நுகர்வோர் விவகார பணிப்பாளர் யசந்த ரதுவிதான தெரிவித்துள்ளார்.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மின்சார சேவையுடன் இணைந்து வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடமாடும் சேவையை மூன்று தினங்களுக்கு முன்னெடுத்தது. நேற்று முன்தினம் இது தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் புதிய மின் இணைப்பு பெறுதல், மின் இணைப்பில் பெயர் மாற்றம் செய்தல், மின்மானி மாற்றுதல், மின் இணைப்பை இடமாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சனைகள் தொடர்பில் இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவினால் பிரதேச செயலகங்கள் ஊடாக முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்தன.

இவை தொடர்பில் வவுனியா மாவட்டத்தில் இருந்து இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு 100 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற நிலையில் அதற்கு தீர்வு காணும் முகமாக மின்சார சபையுடன் இணைந்து நடமாடும் சேவை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு பிரச்சனைகள் காரணமாக மின் இணைப்பு தொடர்பில் பிரச்சனைகளை எதிர் கொண்ட மக்களுக்கு மின்சார சபையின் ஊடாக தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப் பட்டன. (5-4-250)

# விளக்கமறியல் கைதி தப்பியோட்டம்

(நெளுக்குளம்)

சிறைச்சாலையிலிருந்த கைதி ஒருவர் தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டவர் எனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்றுக் காலை சிறைச்சாலையிலிருந்து தப்பித்துச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்ற இக்கைதியை பிடிக்க வவுனியா சிறைக்காவலர்கள் வவுனியா பொலிஸாருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)



மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 115 ஆவது குரு பூசை தினமும் மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கான கௌரவிப்பு நிகழ்வும் சதாவதானி சனசமூக நிலையத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (படம்- மகாலிங்கம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 180 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 330 | 350 |
| தக்காளி | 160 | 200 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 90 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 100 |
| கரட் | 240 | 250 | 280 | 350 |
| பூசணி | 70 | 80 | 100 | 100 |
| புடோல் | 250 | 150 | 180 | 150 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 100-250 | 250 |
| பெரிய வெங்காயம் | 180 | 140 | 140 | 200 |
| பாகற்காய் | 350 | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 140 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 160 | 140 | 160 | 200 |
| பீற்றூட் | 180 | 150 | 150 | 160 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 250 |
| முருங்கைக்காய் | 1500 | 1000 | 1000 | 1400 |
| போஞ்சி | 200 | 200 | 250 | 280 |
| கத்தரிதம்புள்ள | 160 | 140 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 80 |
| தேசிக்காய் | 140 | 120 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-90 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 180 | 140 | 140 | 300 |
| முள்ளங்கி | 60 | 120 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 40 |
| வல்லாரை | 20 | 15 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2022-13.04.2022



**கடமையைக் கண்ணும், கருத்துமாகச் செய்யும் துலாம் இராசி வாசகர்களே!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சுக ஸ்தானத்தில் தனாதிபதி செவ்வாயுடன் இணைந்து சஞ்சரிப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். 12 இற்கு அதிபதி நீச்சம் பெறுவது யோகம்தான். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். உத்தியோகம் சம்பந்தமாக புதிய முயற்சிகள் செய்திருந்தால் அது கைகொடுக்கும். பிள்ளைகள் படித்து முடித்து வேலை தேடிக்கொண்டிருந்தால், நல்ல நிறுவனத்தில் வேலை அமையும்.

**ராகு-கேது சஞ்சாரம்**

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசிக்கு ராகு செல்கிறார். உங்கள் இராசியான துலாத்தில் கேது சஞ்சரிக்கப்போகிறார். எனவே சர்ப்ப தோஷம் உங்களுக்கு உருவாகிறது. இதனால் ஏற்றமும், இறக்கமும் கலந்த வாழ்க்கை அமையும். எப்படியேனும் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். இதுபோன்ற காலங்களில் நாக தலங்களுக்குச் சென்று யோகபலம் பெற்ற நாளில், சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது. கேது பலத்தால் உடல்நலத்தில் தொல்லைகளும், மருத்துவச் செலவும் ஏற்படும்.

## புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்

**மேஷ - புதன் சஞ்சாரம்**

பங்குனி 22 ஆம் திகதி, மேஷ இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், சப்தம ஸ்தானத்திற்கு வரும்பொழுது சுபவிரயங்கள் அதிகரிக்கும். கல்யாணக் கனவு நனவாகும். தந்தை வழி ஆதரவு உண்டு. பழைய வாகனம் ஏற்படுத்தும் செலவால், புதிய வாகனம் வாங்குவீர்கள். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். பங்காளிப் பகை மாறும்.




**கும்ப -செவ்வாய் சஞ்சாரம்**

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 7 இற்கு அதிபதியான அவர், பஞ்சம ஸ்தானத்திற்கு வருவது யோகம்தான். 'பிள்ளைகள் படித்து முடித்தும் வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்ட உங்களின் கவலை இனி தீரப்போகிறது. பிள்ளைகளுக்கு நல்ல வேலை கிடைத்து, உதிரி வருமானம் கிடைக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் சகோதரர்கள் அக்கறை காட்டுவர். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்க எடுத்த முயற்சி கைகூடும். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் வராகப் பெருமாளை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அதிக விரயங்கள் ஏற்படும். சனி -செவ்வாய் சேர்க்கையால் குடும்பத்தில் நிம்மதி குறையும். கணவன் -மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குருப் பெயர்ச்சிக்குப் பிறகு இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வு மட்டுமல்லாமல் கேட்ட இடத்திற்கு மாறுதலும் கிடைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**இறை நம்பிக்கை இருந்தால் எதிலும் வெற்றி பெறலாம் என்று சொல்லும் விருச்சிக இராசி வாசகர்களே!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்று சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே ஆரோக்கியம் சீராகும். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். செல்வ நிலை உயரும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதி நீச்சம் பெறுவதால், உத்தியோகம் மற்றும் தொழிலில் முன்னேற்றம் தேடிவரும். சந்தர்ப்பங்கள் சாதகமாகவே இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்கள் நல்ல காரியம் நடைபெற வழிவகுத்துக் கொடுப்பர். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வி.ஐ.பி.க்களின் ஒத்துழைப்போடு விரும்பிய காரியத்தை விரும்பியபடியே செய்து முடிப்பீர்கள். அரசு-வழி ஆதரவு கிடைக்கும்.

**ராகு-கேது சஞ்சாரம்**

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசிக்கு ராகு செல்கிறார். இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த கேது, இப்பொழுது 12 ஆம் இடத்திற்கு செல்கிறார். எனவே சர்ப்ப தோஷத்தில் இருந்து விடுபட்டு சந்தோஷத்தை காணப் போகிறீர்கள். உங்களுக்கு 'அஷ்டலட்சுமி யோகம்' இந்த மாதம் ஏற்படுகிறது.

## தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்

தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். கேதுவின் சஞ்சாரத்தால் [illegible] யோகம் உண்டு. புதிய தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும்

**மேஷ -புதன் சஞ்சாரம்**

பங்குனி 22 ஆம் திகதி, மேஷ இராசிக்கு புதன் செல்கிறார். அது உங்கள் இராசிக்கு 6 ஆம் இடம் என்பதால், மறைந்த புதன் நிறைந்த தன இலாபத்தைத் தரும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். உத்தி




யோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் எதிர்பார்த்தபடி கிடைக்கும். லாபாதிபதியாகவும் புதன் விளங்குவதால் இக்காலத்தில் திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடைபெறும்.

**கும்ப - செவ்வாய் சஞ்சாரம்**

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அவர் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடமான சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் வந்துசேரும். செவ்வாய், குருவுடன் இணைந்து 'குருமங்கள யோகத்தை உருவாக்குகிறார். அந்த அடிப்படையில் இல்லத்தில் மங்கல ஓசை, மழலையின் ஓசை கேட்கின்ற வாய்ப்பு ஏற்படும். அரசியல் செல்வாக்கு மிக்கவர்களின் ஆதரவோடு காரியங்களை முடிப்பீர்கள். பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். இம்மாதம் முழுவதும் தினமும் அதிகாலையில் விநாயகரை வழிபடுவதன் மூலம் வெற்றிகள் கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் வருமானம் திருப்தி தரும். வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். கணவன் -மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். முன்னேற்றத்திற்கு உறவினர்கள் ஒத்துழைப்பு செய்வர். பிள்ளைகளுக்கான சுபகாரியங்கள் நல்லவிதமாக நடந்தேறும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயரவும், நீண்ட நாட்களாக எதிர்பார்த்த சம்பள உயர்வும் கிடைக்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(நேற்றைய தொடர்ச்சி)

## அம்புலிமாமா

### வேலு விரும்பியது!

மலை அடிவாரத்தில் இருந்த குகையைப் பேரொளி பார்த்து "இன்றிரவு இக் குகையில் தங்கலாம்" என்றான். வேலுவோ "வேண்டாம். நாம் கோட்டைக்கே போய் விடலாம்" எனவே நால்வரும் மலை மீதேறிக் கோட்டை வாசலை அடைந்தார்கள்.

பேரொளி பார்த்து கோட்டைக்குள் நூற்றுக்கணக்கான வௌவால்கள் தொங்கிக் கொண்டிருப்பதாகக் கூறினான். வேலு கோட்டைக் கதவை பலமாக உதைக்கவே அந்த சத்தத்தால் வௌவால்கள் பறந்தோடின. பேரொளி கோட்டைக்குள் ஒரு கிழ ராட்சஸன் இருப்பதையும் அவன் முதுகு கூன் விழுந்திருப்பதையும் கண்டான். ராட்சஸன் மெதுவாக நடந்து வந்து கதவருகே நின்று ஒரு மாடப் பிறையிலிருந்து நீண்ட பற்களையும், கூரான நகங்களையும் உறுதியான கொம்புகளையும் எடுத்து பொருந்திக் கொண்டான். அதைப் பேரொளி மற்றவர்களிடம் கூறினான்.

இதற்குள் ராட்சஸன் "குள்ளா, அழகனே! வந்துவிட்டீர்களா?" என்று கேட்டான். வேலுவும் "கதவைத் திறவுங்கள் ராட்சஸப் பெரியாரே! உங்கள் குள்ளன் தான் எங்களை அனுப்பினார்" என்றான். ராட்சஸனும் "என் மகன் குள்ளன் எங்கே இருக்கிறான்? எப்போது வருவான்?" என்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டான்.

வேலுவும் "முதலில் கதவைத் திறந்து நாங்கள் தங்க இடம் கொடுங்கள். பிறகு சாவகாசமாக எல்லாம் விபரமாகச் சொல்கிறோம்" என்றான். ராட்சஸனும் அவர்களை உள்ளே அழைத்துப் போய்ச் சாப்பிடப் பழங்களையும் பாலையும் கொடுத்தான். அவர்கள் அவற்றைச் சாப்பிட்டு விட்டு "ஒரே களைப்பாக இருக்கிறது. எல்லாவற்றையும் விபரமாகக் காலையில் கூறுகிறோம்" எனக் கூறி



ராட்சஸன் காட்டிய அறையில் படுத்துக் கொண்டார்கள்.

ராட்சஸனும் "இங்கேயே தூங்குங்கள் கோட்டைக்குள் வந்து விடாதீர்கள். வந்தால் உங்களுக்கு ஆபத்து" என எச்சரித்து விட்டுச் சென்றான். சற்று நேரத்திற்கெல்லாம் அந்த ராட்சஸன் பலமாகக் குறட்டை விட்டு தூங்கலானான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்

இராமனைப் பிரிந்து என்னால் உயிர் வாழ முடியாது" என்று கூறி இருந்தான்.

"வாய்மை விலகுகிறது" என்றாள்.

"சத்தியம் தலை காக்கும்; அது என் உயிரைப் போக்குகிறது" என்றான்.

"உயிர் இழக்க அஞ்சவில்லை; இளம் பயிர் அவன்; தழைத்து வாழவிடு" என்றான்.

"வாய் கொழிக்கப் பேசினாய்; வரம் தந்து மகிழ்வித்தாய்; இப்பொழுது தரம் கெட்டுப் பேசுகிறாய்"

"சிபிச்சக்கரவர்த்தி உன் முன்னோன்; வாய்மை தவறவில்லை; புறாவிற்காகத் தன் உயிரைத் தந்தான்; பின்விளை




வைப்பற்றி அவன் சிந்திக்கவில்லை". "கொடு இல்லா விட்டால் என்னைச் சாகவிடு" என்று இறுதி ஆணை பிறப்பித்தாள்.

அரசன் செயல் இழந்தான்; உணர்வு ஒழிந்தான்; கீழே சவம் எனக் கிடந்தான்; [illegible] யம் முடிந்தது; [illegible] மனநிறைவோடு அந்த இரவு கவலையின்றி உறங்கினாள்.

### விழாக் கோலம்

அடுத்த நாள் திருவிழா முடிசூட்டும் நாள். இராமனுக்காக அவ்விழா காத்துக் கிடந்தது; எங்கும் பரபரப்பு; சுறுசுறுப்பு; மக்கள் தேனி போல விழாவுக்கு வேண்டிய பொருட்களைக் கொண்டு வந்து சேர்த்தனர். அலங்காரங்கள் எங்கும் அழகு செய்தன.

மங்கலப் பொருட்கள் வந்து குவிந்தன. வேதபாரகர் மறைகளைச் சொல்லினர்; அவர்கள் வசிட்டரை வணங்கினர்.

கங்கை முதல் குமரி வரை உள்ள புண்ணிய நதிகளில் இருந்து குடங்களில் நீர் கொண்டு வந்து சேர்த்தனர்; அவையில் அமைச்சர்களும் பிரமுகர்களும் வந்து சேர்ந்தனர்; வசிட்டரும் வந்து அமர்ந்தார்; மன்னன் தசரதன் வந்து சேரவில்லை; அனைவரும் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வசிட்டர் தசரதனை அழைத்து வரும்படி சுமந்திரனை அனுப்பி வைத்தார்.

அரண்மனையில் அவனைக் காணவில்லை; சேடியர் கூற அரசன் கைகேயின் அந்தப்புரத்தில் இருப்பதை அறிந்தான்; நேரே அங்கு சென்றான்; சேடியர்பால் செய்தி அனுப்பி, அவையோர் மன்னனை எதிர்ப்பார்ப்பதாகக் கூறினான். மன்னன் அவனைச் சந்திக்கவில்லை; மண்ணி தான் அவனுக்குச் செய்தி தந்தாள்.

"இராமனை அழைத்து வருக" என்று சொல்லி அனுப்பினாள் கைகேயி. சுமந்திரன் தேரைத் திருப்பினான், இராமன் திருக்கோயிலுக்குச் சென்று செய்தி செப்பினான்.

இராமன் முடி சூடும் முன் அன்னையின் அடி சூட விரைந்தான்; திருமாலை வழிபட்டு வணங்கிப் பின் கேகயன் மகள் இருந்த மனை நோக்கிச் சென்றான். மாட வீதி வழியாகச் சென்ற போது மாநகர மாந்தர் அவன் கோலத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திலேயே மிகப்பெரிய மனிதன் யார்? ஒரு வேர்க்கடலையைச் சாப்பிட்டுவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன்.

– பாலக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர்களுக்கு தகைசால் அரசியல் தலைமை இல்லாக்குறை...

அரசின் செல்வாக்கு முற்றாகச் சரிந்து விட்டதென ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்ட புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதைப் பார்த்தபோது 23ஆம் புலிகேசியில் வேற்றுப்படை போர் தொடுக்க வந்து, அவர்களின் காலைப் பிடித்து போர் வேண்டாம் என்று 23ஆம் புலிகேசி மன்னன் அனுப்பிவிட்ட பின்னர், அந்த நாட்டு ஒற்றன் அரண்மனைக்கு ஓடிவந்து மன்னா! எங்கள் நாட்டின் மீது வேற்று நாட்டுப் படை போர் தொடுக்கப் போகிறது எனக் கூறுவதுபோல இருந்தது.

ஆம், அரசின் செல்வாக்கு முற்றாகச் சரிந்து போய்விட்டதென்பது மட்டுமல்ல, இந்நாட்டில் அரசாங்கம் என்று ஒன்று இருக்கிறதா? என்று மக்கள் கேட்கின்றனர்.

இதனைப் புரிந்து கொள்ளாமல், அரசின் செல்வாக்கு முற்றாகச் சரிந்துவிட்டதெனப் புலனாய்வு அறிக்கை தெரிவிக்கின்ற அளவில் நம் நாட்டு நிலைமையுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, அரசாங்கத்தின் செல்வாக்கு முற்றாகச் சரிந்துவிட்டால், அந்த அரசாங்கம் தானாகப் பதவி விலகுவது அல்லது மக்கள் கிளர்ச்சி செய்து அரசாங்கத்தை வெளியேற்றுவது என்பது நடந்தாக வேண்டும்.

எனினும் அப்படியான இரண்டு சந்தர்ப்பங்களுக்கும் சாத்தியமில்லை என்பது தெட்டத் தெளிவு.

அதாவது, எங்களை மக்கள் வெறுப்பதால் இனி நாங்கள் ஆட்சிப்பீடத்தில் இருக்கக் கூடாது எனக் கருதி, தார்மீக அடிப்படையில் ஆட்சியை விட்டு வெளியேறுகின்ற பெருந்தன்மை அரசாங்கத்திடம் இம்மியும் இல்லை.

அதேநேரம் எதிர்கட்சிகள் ஒன்றுபட்டு ஒட்டுமொத்த மக்களையும் திரட்டி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புகின்ற திராணியும் இல்லை.

இந்தநிலையில் ஆட்சிமாற்றம் என்பது இப்போதைக்குச் சாத்தியமாகாதென்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

ஆக, பலமான – செல்வாக்கான அரசியல் கட்சிகள் இல்லாமை காரணமாகவே அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சியை ஏற்படுத்த முடியாமல் இருக்கிறது என்பது நிதர்சனமான உண்மை.

இதை நாம் கூறும்போது, இலங்கையில் காத்திரமான எதிர்க்கட்சிகள் இல்லை என்பது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கும் தகைசார் – நேர்மைத்தன்மை மிகுந்த – தூரநோக்குடைய அரசியல் தலைமை இல்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் 25ஆம் திகதி சந்திக்கவுள்ளது.

இந்தச் சந்திப்பால் ஏற்படக்கூடிய பயன் யாது? என்றால் எதுவுமில்லை.

ஆனால் ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும் என்பதில் சம்பந்தர் தரப்பு உறுதியாக இருக்கிறது.

இதற்கும் மேலாக, முன்னாயத்தம் செய்தே ஜனாதிபதியைச் சந்திக்கின்றோம் என்று சம்பந்தர் கூறியுள்ளார்.

முன்னாயத்தம் மட்டுமல்ல, எழுதி மனனம் செய்துகொண்டு போனாலும் உங்கள் சந்திப்பு எதனையும் தராது என்பது சர்வநிச்சயம்.

இங்குதான் தமிழ் மக்களுக்கு தகைசார் அரசியல் தலைமை இல்லாக்குறை தெரிகிறது.

# வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 6,261 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோய் தாக்கம் அச்சுறுத்தும் வகையில் அதிகரித்துவரும் நிலையில் இவ்வருடத்தின் இதுவரையான நாட்களில் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 6,261டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் 4,522 என்ற அளவில், அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

பெப்ரவரி மாதத்தில் 1,511 டெங்கு நோயாளர்களும், மார்ச் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 228 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

இடைக்கிடையே மழை பெய்கின்றமையால், மீண்டும் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்கள் குறித்து பொது மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு வலியுறுத்தியுள்ளது. (ம)

## நிர்வாகத் தெரிவு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் சங்கப் பணி மனையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடை பெற்றது.

இதில் தலைவராக வே.தபேந்திரன், செயலாளராக மா.சிவபாலன், பொருளாளராக திருமதி. மஞ்சுளா, உப தலைவர்களாக - மருத்துவர். மா.யெயராசா, சி.சத்தியசீலன் உபசெயலாளராக திருமதி. ரஞ்சிதமலர் அருணாசலம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக 15 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

(5-4-100-350)

## இரு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து

### மாணவர்கள் உட்பட நால்வர் காயம்

(கொழும்பு)

பசறை - நமுனுகுல வீதியில் 10ஆம் கட்டை பகுதியில் தனியார் பேருந்துகள் இரண்டு நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இரண்டு பாடசாலை மாணவர்கள் உட்பட 4 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் வேளையில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் பயணித்த பேருந்து ஒன்றும் தனியார் பயணிகள் பயணித்த பேருந்து ஒன்றும் இவ்வாறு நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## மானியத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தொடர் நிகழ்வான 2021 ஆம் ஆண்டு மானிய வேலைத் திட்டங்கள் பிரதேச ரீதியாக தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 22 ஆம் திகதி புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், 23 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பகுதியிலும் 24,25 ஆம் திகதிகளில் முள்ளியவளை, அலம்பில் பகுதிகளிலும் 29 ஆம் திகதி துணுக்காய், 30 ஆம் திகதி வெலிஓயாவிலும் மற்றும் 31 ஆம் திகதி நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களிலும் நடைபெறவுள்ளது. இதன்போது மானியப் பயனாளிகளுக்கான மானிய காசோலைகளும் மைற்றாப் பைக்கற்றுகளும் பாக்கு மரக்கன்றுகளும் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளனர். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை 20 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ் பிரதேசத்தில்** முகாமைத்துவ பீடம், பால்பண்ணை, கலாசாலை வீதி, ஞாபாஸ்கரோதயா வீதி, பால் பண்ணை சந்தி இராய வீதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** விமானப்படமுகாம் வேளாங்குளம், மடுகுளம், பூவரசங்குளம், புலவனூர், பூவரசங்குளம், சாளம்பைக்குளம், சாளம்பைக்குளம் வீட்டுத்திட்டம், செங்கற்படை, சின்னத்தப்பனை (மடுகுளம்), சோபாலபுளியங்குளம், தாலிக்குளம், வேளாங்குளம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வவுனியாசளாகம், அறுகம்புல்வெளி, கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாலிலுப்பைக்குளம், நொச்சிக்குளம், அவுசப்பிடடிய, பொன்னாவரங்குளம், சாளம்பை புதிய வீட்டுதிட்டம், நாளம்பைக்குளம் பல்கலைக்கழக வளாகம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரேத்தில் இலங்கைவங்கி-கிளிநொச்சி, பிருந்தா உற்பத்தியாளர், கார்கில்ஸ் பூட்சிற்றி, கச்சேரி, மக்கள் வங்கி-கிளிநொச்சி, சதொசா கிளிநொச்சி, சிவநருட்செல்வன் அரிசி ஆலை, விளையாட்டு வளாகம், சன் தளபாடங்கள், நீர் வழங்கல் சபை-கிளிநொச்சி, கிளிநொச்சி நகரம், 58ம் பிரிவு இராணுவ முகாம், கந்தசாமி கோவில், கரடிப்போக்கு, சம்பத் வங்கியடி-கிளிநொச்சி, விதை உற்பத்தி பண்ணையடி, நிருநகர், வானவில், இராணுவ ஆதார வைத்திய சாலை- இரணைமடு, இரணைமடு, நீர்ப்பாசனம், இரணைமடு இராணுவ தலைமையகம், இரணைமடு நீர்த்தேக்கம், சாந்தபுரம், திருவையாறு ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### கடவுள் என்றும் இருக்கிறார்

❖ வாழ்க்கை என்பது நிலையற்றது. கலைகின்ற கனவு அது. அழகும், வாலிபமும் வாடிவிடும். நீயே என் தாய் ,என் தந்தை , என் கணவன் , என் அன்பு, என் பிரபு , என் கடவுள் , எனக்கு நீயே வேண்டும். வேறு எதுவும் தேவையில்லை. நீ என்னில் , நான் உன்னில் , நீயே நான், நானே நீ என்று பகலிரவாகச் சொல்லுங்கள். செல்வம் போய்விடும். அழகு அழிந்துவிடும். வாழ்க்கை வாடிவிடும். ஆற்றல்கள் அழிந்துவிடும். ஆனால் கடவுள் என்றும் இருக்கின்றார். அன்பு எப்போதும் இருக்கிறது.

❖ எந்திரமாகிய இந்த உடலை நன்றாக செயற்பட வைத்துக்கொண்டிருப்பது பெரிய விடயந்தான். ஆனால் ஆன்மாவை உடலின் துயரங்களில் பங்க பெறலாமல் பிடித்து வைப்பது அதை விடப் பெருமை வாய்ந்தது. அப்படி ஜடத்தை தனியாக இயங்க விடுவது தான் நீங்கள் ஜடம் அல்ல என்பதற்கு அத்தாட்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 23

ஐந்து (5) சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை, ஏனென்றால் அவை எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்க வில்லை மற்றும் குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும் போது, சரித்திர பிரசித்திபெற்ற பெயர் இடப்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத் தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது. எந்தவொரு பிரேரணையும் தொகுதிகளின் பெயர்கள் சம்பந்தமாக பரிந்துரைக்கவில்லை.

சுருக்கமாக கூறினால் 8 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 5 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 7 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், தொகுதிக்கான சராசரி மக்கள் தொகைக்கு −8.8% மற்றும் + 8.1% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்து வத்தை பாதுகாத்து கண்டி மாவட்டம் 15 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பிரிக்கப் பட்டுள்ளது.

அவை ஹதரலியத்த (160), அக்குரணை (59), பாத்ததும்பர (54), மெததும்பர (74), உடதும்பர (137), குண்டசாலை (81), கண்டி (43), ஹரிஸ் பத்து (84), யட்டிநுவர (95), உடுநுவர வடக்கு (72), பஹத்த ஹேவாஹெட்ட (87), புஸ்ஸெல் லாவ (56), கம்பளை (62), உடுநுவர தெற்கு (78), நாவலப்பிட்டி (46) ஆகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (d8) இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை (d8)- கண்டி மாவட்டம் தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்

| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஹதரலியத்த | 91066 | 1770 | 4422 | 125 | 97383 |
| அக்குரணை | 32170 | 5760 | 49323 | 206 | 87459 |
| பாத்ததும்பர | 68782 | 2546 | 19993 | 313 | 91634 |
| மெததும்பர | 44974 | 36951 | 9770 | 409 | 92104 |
| உடதும்பர | 88417 | 938 | 571 | 20 | 89946 |
| குண்டசாலை | 87035 | 3635 | 2154 | 216 | 93040 |
| கண்டி | 68745 | 13817 | 13312 | 1510 | 97384 |
| ஹரிஸ்பத்துவ | 76505 | 1983 | 9441 | 248 | 88177 |
| யட்டிநுவர | 89444 | 2041 | 7474 | 152 | 99111 |
| உடுநுவர வடக்கு | 82973 | 6882 | 6474 | 782 | 97111 |
| பஹத்த ஹேவாஹெட்ட | 78908 | 6634 | 3255 | 387 | 89184 |
| புஸ்ஸெல்லாவ | 39825 | 35317 | 8277 | 173 | 83592 |
| கம்பனை | 81137 | 3964 | 4668 | 396 | 90165 |
| உடுநுவர தெற்கு | 44404 | 4411 | 41560 | 381 | 90756 |
| நாவலப்பிட்டி | 49103 | 27672 | 10876 | 685 | 88336 |
| கண்டி மாவட்டம் | 1023488 | 154321 | 191570 | 6003 | 1375382 |



கண்டி மாவட்டம் - பிரதேச செயலகங்கள்

## மாத்தளை மாவட்டம் பற்றிய தகவல்கள்

வடக்கு அகலாங்கு 7°23' மற்றும் 8°54' இற்கும் கிழக்கு நெட்டாங்கு 8°29' மற்றும் 80°59' இற்கும் இடையில் 1,993 சதுர கி.மீ. பரப்பில் மாத்தளை மாவட்டம் அமைந்துள்ளது. மத்திய மாகாணத்தின் வடக்கு பகுதியில் இந்த மாவட்டம் அமைந்துள்ளது. மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 35.1% ஐக் கொண்ட இந்த மாவட்டத்தின் நிலப் பிரதேசம் 1,952 சதுர கி.மீ.ஐயும் நீர் பரப்பு 41 சதுர கி.மீ. ஐயும் உள்ளடக்கியுள்ளது.

உள்ளக நீரேந்துப் பிரதேசம் மாவட்டத்தின் மொத்தப்பரப்பில் 2.1% ஆகும். வடக்கு திசையில் அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களையும் தெற்குத் திசையில் கண்டி மாவட்டத்தையும் கிழக்கு திசையில் பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களையும் மேற்குத் திசையில் குருநாகல் மாவட்டத்தையும் எல்லைகளாக கொண்டு அமைந்துள்ளது. 2010 ஆம் ஆண்டு மாவட்டத்தின் மொத்தப்பரப்பில் 36.4% அதாவது 725 சதுர கி.மீ. வனப் பிரதேசமாக காணப்பட்டது. இந்த மாவட்டம் கடல் மட்டத்திற்கு மேல் 50 மீற்றர் தொடக்கம் உச்சமாக 1890+ மீற்றர் வரையில் நிலப்பரப்பு உயர்ந்து செல்கிறது.

சனத்தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பின்படி (2012) மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 484,531 ஆகும். ஒரு சதுர கி.மீற்றருக்கான சனத்தொகை அடர்த்தி 248 பேராகும். 2012 ஆம் ஆண்டு 10 வயதுக்கு மேற்பட்ட சனத் தொகையினரின் எழுத்தறிவு 94.2% ஆகும்.

கொழும்பிலிருந்து 104 கி.மீ. நேரடித் தூரத்தில் அமைந்துள்ள மாத்தளை நகரம் இந்த மாவட்டத்தின் தலைநகரமாகும். 2016 ஆம் ஆண்டு மாவட்டத்தின் வீதிகளின் மொத்த நீளம் 866 கி.மீ. ஆகும்.

2016 ஆம் ஆண்டு மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (40%) அதைத்தொடர்ந்து விவசாயத் துறையில் (38%) மற்றும் கைத்தொழிற்றுறையில் (22%) ஆகும்.

**மத்திய மாகாணத்தின் வடக்கு பகுதியில் மாத்தளை மாவட்டம் அமைந்துள்ளது. மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 35.1% ஐக் கொண்ட இந்த மாவட்டத்தின் நிலப் பிரதேசம் 1,952 சதுர கி.மீ ஐயும் நீர் பரப்பு 41 சதுர கி.மீ. ஐயும் உள்ளடக்கியுள்ளது.**

**வடக்கு திசையில் அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களையும் தெற்குத் திசையில் கண்டி மாவட்டத்தையும் கிழக்கு திசையில் பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களையும் மேற்குத் திசையில் குருநாகல் மாவட்டத் தையும் எல்லைகளாக கொண்டு அமைந்துள்ளது. சனத் தொகை கணக்கெடுப்பின்படி (2012) ஒரு சதுர கி.மீற்றருக்கான சனத் தொகை அடர்த்தி 248 பேராகும்.**

### மாத்தளை மாவட்டம் இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இன மற்றும் மத அடிப்படையிலான சனத் தொகை வேறுபாடு அட்டவணை (e1) இல் காட்டப்பட்டுள்ளது. சிங்கள இனத்தவர்கள் 80.8% உம் பௌத்தர்கள் 79.5% உம் காணப்படுகின்றனர்.

அடுத்ததாக இலங்கை முஸ்லிம்கள் 9.2% உம் மற்றும் இஸ்லாமியர்கள் 9.4% ஆகும். அடுத்து இலங்கை மற்றும் இந்திய தமிழர்கள் 9.8% உம் இந்துக்கள் 9.0% ஆகவும் காணப்படுகின்றனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுக்கு...

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கும் தொழிற் சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். (ம)

## சபுகஸ்கந்த...

வாறு சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் காலவரையறையின்றி மூடப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் மசகு எண்ணெய் பற்றாக்குறை காரணமாக இரண்டு தடவைகள் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பரீட்சைகள்...

மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் இதனை தெரிவித்துள்ளார்.

பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிப்பதற்கான கடதாசி மற்றும் மூலப்பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்கு காரணமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கடதாசி மற்றும் மூலப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக 6, 7, 8ஆம் வகுப்புகளுக்கான இறுதித் தவணை கால அட்டவணையில் திருத்தம் செய்யப்பட்டு 9, 10, 11ஆம் வகுப்புகளுக்கான இறுதித் தவணை பரீட்சைத் திகதிகளுக்கு மாற்றம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கிளிநொச்சி...

பிற்பகல் 3 மணியளவில் வானிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக கடும் காற்றுடன் பலத்த மழை சில பகுதிகளில் பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செல்வாநகர், கிருஷ்ணாபுரம் ஆகிய பகுதிகளில் வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளது.

குறித்த காலநிலை காரணமாக செல்வாநகர் பகுதியில் 9 குடும்பங்களை சேர்ந்த 25 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 7 வீடுகளின் கூரை பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மரம் முறிந்து விழுந்ததில் முச்சக்கரவண்டி ஒன்றும் சேதமடைந்துள்ளது.

இதேவேளை கிருஷ்ணபுரம் பகுதியில் 5 குடும்பங்களை சேர்ந்த 17 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 5 வீடுகளின் கூரைகள் பகுதியளவில் சேத மடைந்துள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கான இடர் கால உதவிகளை வழங்க மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவும் கரைச்சி பிரதேச செயலகமும் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-100,316)

## "நாடு அனுபவித்...

மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு துரித தீர்வின்ன வழங்கி வரிசை யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதோடு, பௌத்த மதகுரு ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை ஆக்ரோஷமாக தாக்க முற்பட்டார். இதனால் அங்கு அமைதியற்ற நிலைமையும் ஏற்பட்டது.

"எரிபொருள் வரிசை வேண்டாம்", "இந்தியாவிற்கு வழங்கிய எண்ணெய் தாங்கிகளையும், அமெரிக்காவிற்கு வழங்கிய யுகதனவி மின்நிலையத்தையும் மீளப்பெறு" உள்ளிட்டவை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் மருதானை - டெக்னிகல் சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

குறித்த இடத்தில் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து கோட்டை புகையிரத நிலையத்தை நோக்கி பேரணியாக செல்லவுள்ளதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஜனாதிபதி செயலகத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர்.

ஒரு மணித்தியாலத்திற்கும் அதிக நேரம் ஜனாதிபதி செயலக வளாகத்தை முற்றுகையிட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (ம)

## 9 மாத குழந்தை...

நெடுந்தீவு 11 ஆம் வட்டா ரத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. இதில் அமலதாஸ் டேயான்சிகா என்ற 9 மாத குழந்தையே உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான மரணவிசாரனையை யாழ். போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம)

## பயங்கரவாத...

எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டம் தற்போது பொருந்தாது என்றும் அதனை முற்றாக நீக்கி தற்போதைய நிலைமைக்கு பொருந்தும் வகையில் மனித சுதந்திரத்தை பாதுகாக்கும் மனித உரிமைகளை காக்கும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் புதிய பயங்கரவாத ஒழிப்புச் சட்டமூலமொன்றையோ அல்லது அதனை ஒத்த வேறு சட்டமூலமொன்றையோ கொண்டு வர வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் இருப்பது, விமர்சன கருத்துக்களை பொறுக்க முடியாத பழிவாங்கும் சட்டமூலம் என்பதுடன் இதன்மூலம் பழிவாங்கல் மற்றும் சந்தர்ப்பவாதமே மேலோங்கும் என்றும் எனவே இதனை உடன் நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். (ம)

## கந்தரோடை...

யாழ். கந்தரோடையில் புதிதாகப் புத்தர் சிலை ஒன்று அமைக்கப்படுகின்றது என அப்பகுதி இளைஞர்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் முறையிடப்பட்டதை தொடர்ந்து குறித்த இடத்திற்கு சென்று நிலைமையினை ஆராய்ந்துள்ளார்.

நேற்றைய தினம் குறித்த இடத்திற்கு வலி.தெற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் சம்பவ இடத்திற்கு அழைத்து செல்லப்பட்டதுடன் அங்கு நின்றிருந்த பௌத்த மதகுருவிடம் இது தொடர்பில் வினவியிருந்தார்.

குறித்த சந்திப்பின் போது அதிகளவான இராணுவத்தினர் பிரசன்னமாகியிருந்ததாக அங்கிருந்தவர்களால் அவதானிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினருடன் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் அங்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ்., கிளி...

நேற்றையதினம் இடம்பெற்ற கைத்தொழில் வர்த்தகத்துறை சம்பந்தமான கலந்துரையாடலில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடபகுதியில் உணவு பற்றாக் குறைமற்றும்உணவுத் தட்டுப்பாட்டை நீக்கும்முகமாகயாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக 20 சதொச விற்பனை நிலையங்களை விரைவில் திறக்க உள்ளோம்.

அவ்வாறு திறப்பதன் மூலம் பொது மக்கள் அத்தியாவசிய பொருட்களை தங்குதடையின்றி பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு யாழ்ப்பாணம் மாவட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உணவு களஞ்சிய சாலைகளில் அத்தியாவசிய பொருட்களை சேமித்து வைத்து சதொச விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதன் மூலம் பொது மக்கள் இலகுவாக தமது அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-33)

# சங்கப் பேழை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், தமிழ்ச்சங்கம் நடாத்தும் சங்கப் பேழை நூல் வெளியீடு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண தமிழ் சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் உலக தாய்மொழி நாள் பேருரை, உயர்தர பரீட்சையில் தமிழ் பாடத்தில் அதிவிசேட சித்தியடைந்தோருக்கான மதிப்பளிப்புநிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி. சற்குணராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம)


### யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கின் புகைப்படம் தேவை

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு அண்மையில் அமைந்திருந்த திறந்த வெளியரங்கின் (தற்போது அந்த அரங்கு உடைந்துவிட்டது) புகைப்படம் வைத்திருப்பவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்

077 315 1326



மெகா பவர்
திகதி 18/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1058
S 11 05 38 54 56

மஹஜன சம்பத
திகதி 2022/03/18
சீட்டிழுப்பு இலக்கம் 4710
K 6 3 5 4 1 8

தன நிதானய
திகதி - 2022.03.18
சீட்டிழுப்பு இலக்கம் - 740
W 03 13 69 81

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1513
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2022.03.18
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,855,420/-
வெற்றி இலக்கங்கள் 04 11 14 22 Q

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.18
சீட்டிழுப்பு இல: 3848
வர்ணம்: செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,698,940/-
வெற்றி இலக்கங்கள் 01 09 53 58 C

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1687
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 18.03.2022
தினம் வெள்ளி
V 16 23 43 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,187,237/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 148
சீட்டிழுப்பு திகதி 18.03.2022
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 25 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,844,640/-

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,382,048/-
திகதி 18.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3399
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 03 30 36 42 சிம்மம்
9 7 5 5 5 9 4
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,731,920/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 02 06 33 51 75
சீட்டிழுப்பு வாரம் 863
2022.03.18 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 223,255,825/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்.கைதடி தெற்கில் விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.**

- கைதடி சந்தியில் இருந்து 600 மீற்றர் தூரம்
- நல்ல சூழலில்
- கைதடி சந்தி பெற்றோல் நிரப்பு நிலையம் (ஏ9 வீதி) அருகாமை வீதியில்

(10694)

**074 291 3725, 074 291 3726**

## காணி விற்பனைக்கு

யாழ். சுன்னாகம் கந்தரோடை வீதியில், ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு முன்பாக College Road இல் 6 பரப்பு காணி 11 அடி தனிப் பாதையுடன் உடனடி விற்பனைக்கு உண்டு. உறுதி, 25 வருடத்திற்கு முற்பட்ட தோம்பு, சோலை வரி உட்பட அனைத்து ஆவணங்களுடன். தரகர்கள் தேவையில்லை. விபரங்களுக்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

ரூபன் : 077 198 0768
செல்வன் : 077 230 6642, 071 520 6642

உரிமையாளர் :
திரு.சந்திரபோஸ் தமிழ்ச்செல்வன் JP(whole Island)
இல.242, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

(10667)

## பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு

**நீங்களும் முகாமையாளர் ஆகலாம்**

முகாமைத்துவத்தில் 25 ஆண்டுகள் அனுபவம் உள்ள **Inner Circle (Pvt) Ltd** நிறுவனத்தில் புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள்



- Administrator
- Supervisor
- Telecallers
- Assistant Manager
- Manager
- Marketing Executive

தங்குமிட வசதி
மருத்துவ வசதி
வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் இலவசம் (விதிமுறைகளுக்குட்பட்டது)

வயது: 18 - 28
தகைமை - O/L, A/L

பயிற்சியின்போது 13500/= - 42000/= (பதவிக்கேற்ப)

(10693)

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார்**
**+94 76 770 7759 / 076 756 5659**

# கோவிட் தொற்று; மேலும் மூவர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் மூவர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,422ஆக அதிகரித்துள்ளது. (ம)

## காணி விற்பனைக்கு

Star Food city இல் இருந்து 500 m தூரத்தில் கொக்குவில் கிழக்கில் 01 பரப்பும் 1.03 குழி உடைய காணி, வெட்டு கிணறும் மற்றும் சுற்று மதிலுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

(10686)

**075 049 8296**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சிற்றுண்டி உணவகத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.



அனுபவம் அவசியமில்லை
பயிற்சி வழங்கப்படும்

**சம்பளம் 20'000/-**

(C-4010)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். **0777-068-777**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்**

**V2 TRAVELS**

(C-4009)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். **0777-068-777**

## வேலை வாய்ப்பு

ஊடக நிறுவனம் ஒன்றுக்கு

- செய்தி வாசிப்பாளர்
- வீடியோ எடிட்டர்

(10695)

**070 414 4145**
**077 779 1929**

# தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு

- பெண் பராமரிப்பாளர்
- உளவளத் துணையாளர்
- களஞ்சிய காப்பாளர்
- முகாமையாளர் (ஆண்)

**உடன் தொடர்புகொள்ளவும்!!!!!**

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

(10689)

**071 535 4500**

## மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்க (வடவலய) வருடாந்த பொதுக் கூட்டம் (20.03.2022)

இடம் : திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையக மண்டபம் (எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக)
காலம் : 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி

மக்கள் வங்கி ஓய்வூதியர்கள் அனைவரையும் தவறாது வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(10685)

**தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள்**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.